2014 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 385, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

385—

திருமண மண்டபம்

***38051—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தொகுதி, ஜம்புலிபுத்தூர் ஊராட்சி, ஜம்புலிபுத்தூரிலுள்ள அருள்மிகு ஸ்ரீ கதலிநரசிங்கப்பெருமாள் திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதம் சார்ந்து பார்க்காமல் மக்கள் மனம் சார்ந்து மகத்தான மக்களாட்சி நடத்திவரும் மாதரசி அம்மா அவர்களை வணங்கி எனது பதிலை வழங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேண்டியுள்ள திருக்கோயில் இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்து 42 ஆயிரம் மட்டுமே. இந்தத் திருக்கோயிலுக்குச் சொந்தமாக அருகில் நிலங்கள் ஏதும் இல்லை என்பதால் திருமண மண்டபம் கட்டப்படுவதற்கான வழிவகை ஏதும் தற்போது இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூடாரை வெல்லும் சீர் கோவிந்தா, உன்தன்னைப்
பாடிப்பறை கொண்டு யாம் பெறும் சன்மானம்"

என்ற திருப்பாவைப் பாடலில்

"பால் சோறு மூட நெய் முழங்கை வழி வார...
கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்"

என்ற ஒரு வரி வருகிறது. இப்பாடலின் பொருள், பால் சோற்றில் முழுக்க நெய் பெய்த சத்துணவை, தான் மட்டும் சாப்பிட வேண்டுமென்று ஆண்டாள் சொல்லவில்லை. எந்தவித சாதி பேதமும் இன்றி எல்லோரும் ஒன்றாக அமர்ந்து கூடியிருந்து சேர்ந்து உண்போம் என்பதுதான் இந்தப் பாடலின் அற்புதமான பொருள். (மேசையைத் தட்டும் ஒலி) இதுதான் தமிழர் பண்பாடு. அதைப்போல 'அம்மா உணவகம்' மூலம் பசிப்பிணி போக்கி உணவளிக்கும் எங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) வயிறு நிறைந்து, மனம் குளிர்ந்து ஆண்டாள் உருவாகப் பார்க்கிறார்கள் தமிழக மக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீ கதலிநரசிங்கப்பெருமாள் திருக்கோயில் ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் பெயர்பெற்ற ஒரு கோயிலாகும். அதற்குத் தேவையான நிலத்தை அந்த ஊர் மக்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். சனிக்கிழமைதோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருகிறார்கள். திருமண நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, அங்கே ஒரு திருமண மண்டபம் கட்டிக் கொடுத்தால் அந்தப் பகுதிக்குச் சிறப்பாக இருக்கும் என்பதைக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திருக்கோயில் தேனி மாவட்டம்,

2014 ஆகஸ்ட் 8]

ஆண்டிப்பட்டி தொகுதியில் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்து 42 ஆயிரம் மட்டுமே. பொருள் வசதி மிகக் குறைவாக உள்ளபோதும் நித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் நல்லாசியுடன் ரூ.17 இலட்சம் செலவில் மரத் தேர் செய்யும் பணி நடைபெற்று வருகிறது. பொதுவாக திருக்கோயிலையொட்டி திருமண மண்டபம் கட்டப்பட வேண்டுமென்றால் அதற்கு அத்தியாவசியமாகத் தேவைப்படுவது நிலம். இத்திருக்கோயிலைப் பொறுத்தமட்டில், அருகில் சொந்தமாக நிலம் ஏதும் இல்லை. இருப்பினும், தனியார் நிறுவனங்களோ அல்லது நன்கொடையாளர்களோ மனமுவந்து நிலம் வாங்கி, திருமண மண்டபம் கட்டுவதற்கான நிதி வழங்க முன்வரும்பட்சத்தில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு திருமண மண்டபம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண மண்டபம் கட்டுவது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.த. செல்லப்பாண்டியன் அவர்கள்.

முற்பகல் 11-15

திரு. சி.த. செல்லப்பாண்டியன்: உலகத் தமிழர்களின் ஒரே குரல், தமிழகத்தின் தலைசிறந்த முதலமைச்சர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் மிகவும் பிரசித்திப்பெற்ற உடனுறை பாகம்பிரியாள் சங்கரீஸ்வரர்

ஆலயத்தில் ஏழை, எளிய மக்களின் திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. அந்தத் திருக்கோயிலின் அருகில் திருமண மண்டபம் கட்டித் தர அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்கு எடுத்துச்சென்று, ஆய்வு செய்ய பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

திரு. ர.ம. பாபு முருகவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணியில் புத்திர காமட்டீஸ்வரர் ஆலயம் உள்ளது. அந்தத் திருக்கோயிலுக்கு தசரத மகா சக்கரவர்த்தி அவர்கள் வந்து, புத்திர காமேட்டீஸ்வரர் யாகம் செய்த பின்புதான், இராமபிரான் பிறந்தார் என்பது வரலாறு. தமிழகத்தைச் சுற்றியுள்ள மாநிலங்களிலிருந்து, பல தம்பதியர்கள் ஆடி மாதத்தில் அந்தத் திருக்கோயிலுக்கு வந்து, குழந்தை வரம் வேண்டி யாகம் நடத்திச் செல்கின்றார்கள். மேலும், அந்தத் திருக்கோயிலில் திருமணங்களும் நடக்கின்றன. ஆலயத்திற்கு உண்டான நிலமும் இருக்கின்றது. எனவே, அந்த ஆலயத்திற்குத் திருமண மண்டபம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பூ. செந்தூர் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.